**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 57/2026 |
| Deposition of witness | PW- 7 /LW- 10 |
| Name | திரு. உதயன் (தலைமை காவலர்) |
| Father's Name | திரு. சீனிவாசன் |
| Village | நெய்வாசல் அக்கரை |
| Taluk | ஒரத்தநாடு |
| Age | 47/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 2nd day of July 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுக்கூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.12.2025 அன்று இரவு 22.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது விக்னேஷ் த/பெ சிவக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக புகாரின் கொடுத்தார். அந்த மனுவை விசாரணை செய்து நிலைய குற்ற எண் 448/2025 ச/பி 303(2) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கை மேல் விசாரணைக்கு உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் தன் மனுவில் என்ன Laptop தொலைந்தது என்று குறிப்பிட்டிருந்தாரா என்றால் Dell Laptop என்று சொன்னார். அதன் Model சொன்னாரா என்றால் இல்லை. வேறு எந்த பொருளும் திருடு போனதா என்று புகாரில் சொன்னாரா என்றால் இல்லை. புகாரில் 3 Laptop இருந்ததாகவும், அதில் 1 காணாமல் போனதாகவும் புகார் கொடுக்கப்பட்டது

என்றால் சரியல்ல. புகார்தாரரை சரியாக விசாரிக்காமல் எதிரிகள் மீது புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை